# ૩

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# இது தேவையா?

பரிசுத்த ஆவியானவரால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பதிவேடு களின்படி பெந்தெகொஸ்தே நாளன்று கிறிஸ்துவினிடத்திற்குக் கொண்டு வரப்பட்ட சீஷர்களில் ஒருவர்கூட "சபையில் சேருதல்" என்பது பற்றி ஆலோசனை அளிக்கப்பட்டிருந்ததில்லை. "சபை உறவின் தேர்ந்து கொள்ளுதல்" என்பது எதவும் அந்த நாட்களில் தரப்படவில்லை. "புதிதாய் மனம் மாறிய" இவர்களை நோக்கி "உங்கள் விருப்பத் தேர்வின்படியான சபையில் நீங்கள் சேர்ந்து கொள்ளுங்கள்" என்று எந்த ஒரு பிரசங்கியாரும் கூறவில்லை. ஆனால் ஒரே ஒரு சபைதான் இருந்தது, இரட்சிக்கப்பட்ட யாவரும் - தாங்கள் அதில் "சேர்ந்து கொண்டதாலோ," வேறு சபையைக் காட்டிலும் இதை முன்னுரிமை கொடுத்து விரும்பியதாலோ அல்ல ஆனால், நமது கர்த்தரின் விலைமதிப்பற்ற இரத்தத்தினால் வாங்கப்பட்ட காரணத்தினால் - இந்த சபையைச் சார்ந்தவர்களாய் இருந்தார்கள். இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாள், நேரம் மற்றும் நிமிடத்திலேயே அவர்கள் விலை கொடுத்த உரிமையினால் தேவனுடையவர்களாய் இருந்தார்கள். அவருடையவர்களாய் இருந்ததால், அவருடைய மக்களுடன் சேர்க்கப்பட்டார்கள், அது கர்த்தரால் உருவாக்கப்பட்ட சரீரமாக (சபையாக) இருந்தது; ஏனெனில் இரட்சிக்கப்பட்டவர்களை அவரே அன்றாடமும் அதில் சேர்த்து வந்தார். பூமியில் (இருந்து) இரட்சிக்கப் பட்டவர்களாக எருசலேமில் இருந்த சபையாக இவர்கள் அமைந்திருந்தார்கள்.

மத ரீதியாகப் பேசுவதென்றால் முதல் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருந்தார்கள். அவர்கள் எந்த ஒரு நாமகரணக் கூட்டத்தையும் சார்ந்திருக்கவில்லை, ஆனால் நாமகரணமற்ற கிறிஸ்தவர்களாக, இரட்சிக்கப்பட்டவர்களாக, தேவனுடைய சபையை மட்டும் சார்ந்தவர் களாக இருந்தார்கள். தேவன் தமது சபையில் அவர்களைச் சேர்த்துக் கொண்டதால் அவர்கள் இவ்வகையான மக்களாய் இருந்தார்கள். அவர்கள் இவ்வகையாக மட்டுமே வாழ்ந்து, இறந்திருந்தால், இந்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களைப் போலவே ஆகவும், வாழவும் மற்றும் இறக்கவும் உள்ள உரிமையை எவர் எனக்கு மறுக்க முடியும்? அவர்களைப் போலவே கிறிஸ்தவராவது எனது உரிமை என்பதையும் அவ்வாறு இருப்பது எனது இன்றியமையாத கடமையாக உள்ளது என்பதையும் எவர் மறுக்க முடியும்?

நான் பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றுகிறவனாக இருந்து, இந்தக்

கிறிஸ்தவர்களைக் காட்டிலும் அதிகமானவனாக இருக்க முடியுமா? இந்த பூமியில் இருந்த முதல் கிறிஸ்தவர்கள் நாமகரணம் எதுவும் அற்றவர்களாக இருந்தார்கள்; அதாவது, அவர்கள் எந்த நாமகரணக் கூட்டத்தையும் சேர்ந்தவர்களாய் இருந்ததில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் இவ்விதமாய் வழிநடத்தப்பட்டிருந்தால், ஒருவர் நாமகரணக் கிறிஸ்தவராய் இருப்பது என்பது பரிசுத்த ஆவியானவரின் தலைமைத்துவத்தில் இருந்து விலகிச் செல்லுதல் ஆகாதா? இது ஒரு கிறிஸ்தவனாக மற்றும் ஒரு கிறிஸ்தவனாக மட்டுமே இருப்பதற்கு எனது விலக முடியாத உரிமையாகவும், எனது இன்றியமையாத கடமையாகவும் உள்ளது. வேறு எந்த வழியிலும் நான் பரிசுத்த ஆவியானவரை உண்மையுடன் பின்பற்ற முடியாது. ஆகையால் என்மீது ஒரு நாமகரணக் கூட்டத்தினுடைய பெயரின் அழுத்துதலும், மற்றவர்களை கிறிஸ்தவனல்லாதவர்களாக்க முயற்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்படுதலும் இன்றி, ஆவியானவருடைய அறிவுறுத்துதல்களைப் பின்பற்ற உண்மையான முயற்சியை மேற் கொள்ளும்படி நான் அனுமதிக்கப்பட வேண்டும் அல்லவா?

இரட்சிக்கப்படும்படியாக என்னால் சாத்தியப்பட்ட அளவுக்கு ஒவ்வொரு ஆத்துமாவையும் கிறிஸ்துவின் இரத்தத்திடம் வழிநடத்துவது என்பது பரலோகத்தினால் என்மீது விதிக்கப்பட்ட கடமையாக உள்ளது. தேவனுடைய ஆவியானவரின் பரிசுத்தமான மற்றும் பாதுகாப்பான தலைமைத்துவத்தின்கீழ் ஒவ்வொரு ஆத்துமாவையும் கொண்டு வருதல் என்பது எனது கடமையாக உள்ளது. தெய்வீக ஆவியானவரால் கிறிஸ்தவர்களாக்கப்பட்டவர்கள் நாமகரணமற்ற கிறிஸ்தவர்களா யிருந்ததால், தேவனைப் பிரியப்படுத்த விரும்புகின்ற ஒவ்வொருவரையும், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்திய மக்கள் போலவே கிறிஸ்தவராய் இருக்கும்படி முயற்சி செய்யும்படி உற்சாகப் படுத்துவது எனது கடமையாவதில்லையா? இந்தக் காரணத்திற்காகவே, கிறிஸ்தவர்களாக விரும்புகின்றவர்கள் எல்லாரையும் - தொடக்க நாட்களில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட கிறிஸ்தவர்களைப்போல மட்டும் - நாமகரணத்துவம் யாவற்றையும் உரிந்து போட்டு அப்படிப்பட்டவர்களுடன் ஐக்கியம் கொள்ளாதிருக்கும்படி புத்தி சொல்லுகிறேன். பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றுகையில் எந்தக் கிறிஸ்தவரும் நாமகரணத்துவத்துடன் இணைவோ ஐக்கியமோ கொண்டிருக்க முடியாது என்பது உறுதி, ஏனெனில் தெய்வீக ஆவியானவர், எந்த கிறிஸ்தவரையும் நாமகரணத்துவத்தினுள் ஒருக்காலும் வழி நடத்துவதில்லை. இந்த சத்தியமானது, சூரியன் அதிகாலையில் உதிக்கும் என்பதைக் காட்டிலும் அதிக நிச்சயமானதாக உள்ளது.

எனவே இந்தக் காலத்தில் உள்ள நாமகரணத்துவத்தை உண்டாக்கிய வர் பரிசுத்த ஆவியானவரா? என்பது ஒரு கேள்வியாக இருப்பதில்லை; ஏனெனில் அது அவரல்ல என்பது உறுதியாகும். மாறாக, "அவருடைய (ஆவியானவருடைய) பரிசுத்த அறிவுறுத்தலினால் ஆக்கப்பட்ட கிறிஸ்தவரைப் போல் இருப்பதில் நான் திருப்தியடைகின்றேனா?" என்பதே கேள்வியாக உள்ளது. என்னிடத்தில் நான் கேட்டுக்கொள்ளவேண்டிய

*கேள்வி என்னவென்றால், "அவருடைய தெளிவான எளிமையில் நான் திருப்தியடைகின்றேனா? அல்லது அவருடைய தெய்வீக மாதிரியைக் கவனியாது விடும் செயலின் (விளைவின்) பொறுப்பை ஏற்பவனாக இருக்கின்றேனா?" என்பதே ஆகும். நிச்சயமாக இருப்பதற்கு, தேவன் மக்களைத் தமது ஊழியக்காரர்களாயிருக்கும்படி வற்புறுத்துவதில்லை ஆனால் அதை அவர்கள் சுயாதீனமாய்த் தெரிந்து கொள்ளும்படி விட்டுவிடுகிறார். உண்மையில் சில தனி நபர்கள், நமது தேவனுடைய ஞானத்தைப் பின்பற்றுவதற்குப் பதிலாக மதத்தில் உள்ள மனிதர்களின் ஞானத்தை(இந்த ஞானத்தின் தொகுப்பே இந்தக் காலத்தில் உள்ள நாமகரணக் கூட்டத்தின் ஞானமாய் உள்ளது)ப் பின்பற்றுவதையே தேர்ந்து கொள்ளுகின்றார்கள். இதனைத் தேவன் அனுமதிக்கின்றார், ஆனாலும் அவர் பின்வருமாறு எச்சரிக்கை செய்கின்றார்:*

> *ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி (பிர. 11:9).*
>
> *இஸ்ரவேலரே, நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும், உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தில் நீங்கள் பிரவேசித்து, அதைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கும், நீங்கள் கைக்கொள்வதற்கு நான் உங்களுக்குப் போதிக்கிற கட்டளை களையும் நியாயங்களையும் கேளுங்கள். நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக் கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் (உபா. 4:1, 2).*
>
> *நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டும் (உபா. 12:32).*
>
> *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத். 7:21).*
>
> *கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக் கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (2 யோவா. 9).*
>
> *இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும்,*

*பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவை களிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார் (வெளி. 22:18, 19).*

*பரிசுத்த ஆவியானவர் தமது போதனை முழுவதிலும் கண்டிப்பான சொற்றொடர்களில், அவருடைய போதனைக்கு கூடுதல்கள், குறைத்தல் கள், திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் ஆகிய யாவற்றையும் தடை செய்கின்றார். நாம் இறந்தாக வேண்டும் என்பதை அறிந்துள்ளது போலவே இதையும் நாம் மிகவும் உறுதியாக அறிந்துள்ளோம். நாமகரணத்துவம் என்பது அதன் சிக்கல்கள் மற்றும் திட்டங்கள் ஆகிய எல்லாவற்றுடனும், கிறிஸ்துவின் எளிமையுடன் மனித ஞானத்தால் ஏற்பட்ட ஒரு கூடுதலாக உள்ளது. இந்த உண்மையானது, இயேசு கல்லறையில் இருந்து எழுந்தார் என்ற சத்தியம் போலவே நிச்சயமானதாக உள்ளது. பரிசுத்த ஆவியானவர் தமது (எழுத்து) ஊழியத்துடன் எந்த ஒரு கூடுதலையும் வலிவாய்த் தடை செய்கின்றார். கிறிஸ்துவின் மூலமாக அவர் நாமகரணமற்ற கிறிஸ்தவத்தை மட்டுமே கொடுத்துள்ளார். எனவே அர்ப்பணிப்புள்ள இருதயங்கள் - மதத்தில் தேவனுடைய ஆவியானவரை மட்டுமே பின்பற்றத் தீர்மானம் செய்த இருதயங்கள் - நாமகரணக் கிறிஸ்தவத்தில் தொடர்ந்து இருப்பது எப்படி என்பது தெளிவற்றதாகவே உள்ளது. இதைப் பற்றி நீங்கள் என்ன செய்வீர்கள்? இது உங்களின் பொறுப்பாக உள்ளது.*